

திருமந்திரம்
சொல்வதென்ன? ~
ஓர் ஆய்வு
கே.வி.குணசேகரம்

எனது தந்தை கந்தர் வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



திருமந்திரம் சொல்வது என்ன?

எல்லா மதங்களும் ஒன்றையே வலியுறுத்துகின்றன. நல்லவற்றைச் செய். தீயவற்றைச் செய்யாதே. நல்லவற்றைச் செய்தால் என்றும் நன்மையைப் பெறலாம். தீயவற்றைச் செய்தால் ஒருபோதும் நல்லவை நடவாது. இதையே எல்லாச் சமயத் தோத்திர நூல்களும், சாத்திர நூல்களும் கூறுகின்றன. இந்நூல்கள் அவ்வவ் சமயங்களைப் பின்பற்றுவோரின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றன. இறைநம்பிக்கையும், இறைபக்தியும் சமய வாழ்வின் அடித்தளமாக இருப்பதால் சாத்திர நூல்களும் தோத்திர நூல்களும் இல்லாத சமயங்கள் எதுவும் இல்லை. எத்தனையோ சமய சாத்திர தோத்திர நூல்கள் சைவசமயத்தில் காணப்பட்டாலும், தொன்மைக்காலம் தொட்டுச் சிவஞானபோதம், திருவருட்பயன், திருமந்திரம் போன்ற நூல்கள் வழக்கில் இருந்து வருகின்றன. சிவஞானபோதம் சிவபெருமானின் கையில் எவ்வேளையிலும் உள்ளது. சிவஞானபோதமும் திருமந்திரமும் சிவபெருமானால் நந்தியெம்பெருமானுக்கு உபதேசிக்கப்பட்டவை. திருமந்திரத்திற்கு மந்திரமாலை என்னும் திருப்பெயரும் உண்டு.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் நூற்றுத்தொண்ணூற்று ஐந்து உபதலைப்புக்களையும் உடையது. இதிலுள்ள திருப்பாடல்கள் மூவாயிரமாகும். இத்திருமந்திரம் தமிழ்வேதாகம முழுமுதற் கருவூல நூலாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு இதன் விளக்கமே பதினொரு திருமுறைகளும், பதின்நான்கு நூல்களுமென்று சைவசித்தாந்திகள் நம்புகின்றனர். இந்நூலில் சைவசமய உண்மைகளும், திருக்கோவில் வழிபாடுகளும் திருவுருவச் சிறப்புக்களும் சக்கர அமைப்பும், மந்திரமான்பும் அடியார்களின் பெருமைகளும், சிவகுருவின் தன்மைகளும், சிவபூசையின் பெருமைகளும், சிவப்பேறும் பற்றிய விரிவும் விளக்கமாகக் கூறப்படுகிறது.

திருமந்திரம் தமிழ் வேதமாகும். சிவபெருமானின் திருவருளால் திருவாவடுதுறையில் திருவரசு மரத்தின் கீழ் அமர்ந்து சிவனை நாள்தோறும் நினைத்துத் திருமூலர் அருளிய செந்தமிழ் ஆகமம் திருமந்திரமாகும்.

சாந்தனூரில் பசுக்களை மேய்க்கும் இடையனான மூலன் இறக்க அவன் மேய்த்த பசுக்கூட்டம் கலங்கியது. அதனால் மூலனின் உடலில் புகுந்து பசுக்களின் துயரத்தை அவ்வழியால் வந்த சுந்தரன் நீக்கினான் என்பது வரலாறு. திருமூலர் பதஞ்சலி முனிவருடன் முதல்முறை தமிழ்நாட்டிற்கு வந்தார். இரண்டாம் முறை அவர் கயிலையில் இருந்து பொதிகையை நோக்கி வரும் போது தான் பசுக்களை மேய்க்கும் இடையனான மூலன் இறந்தபோது அவனது பிரிவைத் தாங்க முடியாது பசுக்கள் துன்பப்பட்டன. அதனால் இரக்கமுற்ற சுந்தரன் தனது உடலை ஒரு மரப்பொந்துள் வைத்து விட்டுத் தான் மூலனின் உடலுள்ப் புகுந்தார். பின் வந்து பார்த்த போது தனது உடலைக் காணாமையால் மூலனது உடலில் இருந்தவாறே திருமந்திரப் பாடல்களை எழுதினார். சுந்தரன் என்ற திருமூலனுக்கு நந்தியெம்பெருமான் நாதன் என்ற பட்டத்தை வழங்கினார். சுந்தரன் நந்தியின் அருளால் தான் மூலனது உடம்பினுள் நுழைந்ததாக திருமந்திரம் கூறுகிறது. மூலனின் உடலில் இருந்தே ஒன்பது ஆகமங்களையும் ஒன்பது தந்திரங்களாகப் பாடினார் என்றும் திருமந்திரம் கூறுகிறது.

திருமந்திரத்தில் அகத்தியர், திரிபுராதிகள், இராவணன், சலந்தன், தக்கன், அந்தக அசுரன், மார்க்கண்டர் ஆகியோரைப் பற்றித் திருமூலர் கூறியுள்ளார். இவர்களில் சிலர் திருமூலருக்கு முற்பட்டவர். சிலர் சமகாலத்தவர்.

வசிட்டர், உபமன்னியு, பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகியோர் திருமூலரின் காலத்தவர். இதனால் திருமூலரது காலம் இராமாயணக் காலமென்பதால் அது கி.மு 6000 எனக் கொள்ளப்படுகிறது. பொதிகை மலை அத்தியரும், சலந்தரனும், தக்கனும், அந்தக அசுரனும் திருமூலருக்கு முந்தியவர்கள்.

தமிழ்மொழி முதன் முதல் உருவ எழுத்துக்களையும், பின்கோல் எழுத்துக்களையும், பின் வட்ட எழுத்துக்களையும், அதன் பின் சதுர எழுத்துக்களையும் கொண்டிருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். உருவ எழுத்துக் காலத்தில் தான் தமிழில் இருந்து சீனம், கடாரம், சுமேரியம், பினீசியம், எகுபதியம் முதலிய மொழிகள் பிரிந்தன.

கோல் எழுத்துக் காலத்தில் மராட்டியம், வங்கம், கோசலம், பலூச்சியம், ஆரியம், பாளி, பிராகிருதம் முதலிய மொழிகள் தமிழில் இருந்து பிரிந்தன.

வட்ட எழுத்துக் காலத்தில் தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகள் தமிழில் இருந்து பிரிந்தன.

அதன் பின் தமிழுக்குச் சதுர எழுத்துக் காலமாகும்.

கோல் எழுத்துக் காலத்தில் ஆரியர் தமிழ் நாட்டுள் நுழைந்தனர். கரப்பா, மெகஞ்சதாரோ நகரங்கள் மண்மாரியால் அழிந்த பின்பே ஆரியர்கள் சிந்து நதிப் பிரதேசத்திற்கு வந்து குடியேறினர். அதன் பின் விந்திய மலை வரை போர் செய்து வென்று ஆரியர் வர்த்தத்தை ஏற்படுத்தினர். ஆரியர் வர்த்தத்திற்கு இந்து தானம் என்ற பெயர் இருந்தது. அது இந்துக்கள் வாழ்ந்த இடம். ஆரியருக்கு இந்துக்கள் என்ற பெயர் பாரசீகரால் கொடுக்கப்பட்டது. இந்து என்பது பாரசீகச் சொல்லாகும். ஆரியர்களால் பல நாடுகளைக் கைப்பற்றிய போது அரசர்களும், முனிவர்களும், மக்களும் பணம் பதவி விருதுகளுக்காக ஆரிய மதத்திற்கு மாறினர். இதில் முக்கியமானவர்கள் விசுவாமித்திரர் சனகர் முதலியோராவர். ஆரியரோடு சேர்ந்த விசுவாமித்திரருக்குப் பிரம ரிஷிப்பட்டமும், சனருக்கு ஞானிசிப் பட்டமும் அளித்து ஆரியர் கௌரவப்படுத்தினர். இதை விரும்பாத மன்னர்களும், மக்களும், முனிவர்களும் விந்திய மலைக்குத் தெற்கே இருந்த தக்கணம் என்னும் இடத்திற்கு வந்து குடியேறினர். தக்கணத்திலே தான் வட்டெழுத்துக் காலம் தொடங்கியது.

கோல் எழுத்துக் காலத்தில் தமிழில் பதினாறு உயிர் எழுத்துக்களும் பதினைந்து மெய்யெழுத்துக்களும் வழக்கிலிருந்தன. அது போல வட்டெழுத்துக் காலத்தில் ஐம்பத்தொரு எழுத்துக்கள் இருந்தன.

பாரத காலத்திற்குச் சற்று முன் பின் தமிழுக்குச் சதுர எழுத்து ஆரம்பமானது. இக்காலத்தில் தமிழுக்குப் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், பதினெட்டு மெய்யெழுத்துக்களும் இருந்தன. இக்காலத்தில் துவார பதியிலிருந்து வந்த உலோபாமுத்திரை அகத்தியர், பேரகத்தியர், சிற்றகத்தியம் என்ற இரு இலக்கண நூல்களை எழுதினார். அத்துடன் தமிழுக்குச் செந்தமிழ் எனப் பெயரிட்டார். அப்போது தான் ஆயுத எழுத்துத் தமிழில் சேர்க்கப்பட்டது. ஆயுத எழுத்துடன் தமிழ் மொழியில் முப்பத்தொரு எழுத்துக்கள் இருந்தன.

இக்காலத்தில் தான் வடநாட்டின் மொழிகளான ஆரியம், பிராகிருதம் ஆகியவற்றைச் சீர் செய்து சமஸ்கிருதம் என்ற மொழியை வியாசர் உருவாகினார். அத்துடன் வியாசர் பல புராணங்களையும் இதிகாசங்களையும் சமஸ்கிருத மொழியில் எழுதினார். வியாசர் அதற்குத் தமிழில் இருந்த கோல் எழுத்துக்களையே கருவியாகக் கொண்டார். அதனால் சமஸ்கிருதத்திற்கு வடதமிழ் என்ற பெயர் உண்டானது.

திருமூலர் இராமாயண காலத்தவர். இராமாயாண காலத்தில் தமிழில் வட்டெழுத்தே வழக்கில் இருந்தது. அப்போது இராவணனின் சேனை மொழியாக இருந்தது. தெலுங்கு. அம்மொழியை உருவாக்கிய இராவணன், தமிழ் வட்டெழுத்துக்களையே சிறிது மாற்றி அமைத்தான். அம்மொழிக்கும் ஐம்பத்தொரு எழுத்துக்களே இருந்தன.

திருமூலர் அதைத் திருமந்திரத்தில் 942, 943, 944 ஆம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். இராவணன் திருமூலரின் காலத்தவன். அக்காலத்தில் தான் இராம இராவண யுத்தம் நடைபெற்றது. அக்காலத்தில் வடநாட்டில் தமிழ் மொழி பொது மொழியாக இருந்தது என்று பின் வந்த ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அத்துடன் அப்போதிருந்த ஐந்து கண்டங்களிலும் தமிழ்மொழி வழக்கிலிருந்தது.

ஐந்து மண்டங்கள் என்று திருமூலர் கூறியது ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என்றும் கண்டங்களையேயாகும். திருமூலரின் காலத்தில் இந்தியா முழுவதும் தமிழ் நாடாக இருந்தது. கடல் கடந்த நாடுகளிலும் தமிழர் வாழ்ந்தனர். அதனால் வான்மீகி தனது இராமாயாணத்தில் தமிழ் மொழியை மதுரமொழி என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆரியருக்கு மொழியிருக்காததால் தமிழ் எழுத்துக்களில் மாற்றம் செய்து தமது மொழியாக்கினர். அதன் பின் தமிழர்களை அவர்கள் தாக்கி அழித்தமையால் தமிழர்கள் தெற்கில் இருந்த தக்கணத்தில் ஏற்கனவே தமிழர்கள் வாழ்ந்து வந்தமையால் வடக்கில்

இருந்து இடம்பெயர்ந்த தமிழர்கள் தக்கணத்தில் வாழ்வோருடன் வந்து சேர்ந்தனர். இக்காலம் வட்டெழுத்துக் காலமாகும். வட்டெழுத்துக்கால இறுதியில் தான் இராமாயாணம் எழுதப்பட்டது.

இந்நிலையில் சிவப்பு இந்திய வம்சத்தவனான இராவணனைத் தமிழ் நாட்டில் இருந்து துரத்தத் தமிழர்கள் இராமனது உதவியை நாடினர். அதன் பின் ஆரிய நாகரிகம் தமிழ் நாட்டில் பரவ ஆரம்பித்தது. அதன் பயனாக ஆரிய வம்சத்தைச் சேர்ந்த பிராமணர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தனர். அதனால் மொழிக் கலப்பு உண்டானது. பிராமணரின் பூசைகள் ஆராதனைகளைச் செய்யக் கூடாது என்றும் தமிழ்த் தெய்வமான சிவனைத் தமிழில் அர்ச்சிக்க வேண்டும் என்றும் திருமூலர் திருமந்திரத்தில் வலியுறுத்தியுள்ளார்.

எண்ணாயிரம் வருடங்களுக்கு முன்பு திருமூலர் சுந்தரநாதன் என்னும் பெயருடன் முதல் தடவை தென் நாடான தமிழ் நாட்டிற்கு வந்தார். அதன் பின் அவர் திருக்கைலைக்குச் சென்று அங்கு தவம் செய்தார். இராம இராவண யுத்தம் முடிந்த பின் கி.மு 3100 ஆம் ஆண்டில் அதாவது 5041 ஆண்டுகளுக்கு முன்பு பொதிகை மலையில் வாழ்ந்த அகத்தியரைச் சந்திப்பதற்காகக் கயிலையில் இருந்து வந்தார். இது அவரது இரண்டாவது தென்னாட்டு யாத்திரை ஆகும்.

திருமூலர் கயிலாயத்தில் இருந்து வந்து கொண்டிருந்த போது மகாநதிக்கரையில் துவாரரகையின் அரசனான கண்ணனை ஒரு வேடன் கொன்று அவனது உடலைத் தீ மூட்டி எரித்தான். அப்போது பெரு மழை பெய்தது. அதனால் அரை குறையாக எரிந்த கண்ணனின் உடல் வெள்ளத்தால் தள்ளப்பட்டுச் சென்று பூரிக்குப் பக்கத்தில் ஒதுங்கியது. அவ்வூரவர்கள் அவ்வுடலைக் கண்டு, அது துவாரகைக்கோ மான் கண்ணனின் உடல் என அடையாளம் கண்டு அதனை எடுத்து அடக்கம் செய்தனர். அவ்விடம் தான் தற்போதைய ஜெகன்னாதமாகும். இதை திருமூலர் நேரில் கண்டதாகத் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். அதன் பின் அவர் பொதிகையை நோக்கி வரும் வழியில் தான் பசுக்களை மேய்த்த ஆயன் இறந்தான். அதன் பின் திருமூலர் என்ற பெயருடனும் மூலனின் உடலுடனும் திருவாவடுதுறையை அடைந்து, அங்கிருந்த சிவன் கோவிலின் வெளிப்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் நின்ற ஓர் அரசமரத்தடியில் 3000 வருடங்கள் யோகத்தில் இருந்து ஆண்டுகளுக்கு ஒரு பாடலாக தமிழ் மூவாயிரம் என்ற திருமந்திரத்தைப் பாடினார். அவர் கி.மு. 100 இல் பரமுத்தியடைந்தார். பரமுத்தியடையு முன் திருமந்திரத்தைத் தனது ஏழு சீடர்களுக்கும் கற்பித்தார். அத்துடன் பல மடங்களை உருவாக்கினார். திருமந்திரம் சுவடியை அக்கோவிலின் பலி பீடத்தின் கீழ் வைத்தார். அதைத் திருஞானசம்பந்தர் எடுத்தார் என்று தேவாரப் பதிகங்கள் கூறுகின்றன. திருமூலர் ஆரியரது பூசை முறைகளான யாகங்கள், வேள்விகள், சமஸ்கிருத அர்ச்சனைகளை ஏற்கவில்லை. அதை ஏற்கக் கூடாதென்று திருமந்திரப் பாடல்கள் பலவற்றில் கூறியுள்ளார். சிவனுக்குத் தமிழில் பூசை செய்ய வேண்டும் சிவன் தமிழன் என்பது திருமூலரது செய்தி. இது பல திருமந்திரப் பாடல்களில் உள்ளது.

## திருமந்திரமும் குறளும்

திருவள்ளுவரின் இயற்பெயர் நெடுமாறன் வள்ளுவன் என்பதாகும். வள்ளுவர் இளம் வயதில் தொல் காப்பியத்தையும் திருமந்திரத்தையும் நன்கு கற்றவர். அதனால் மிகுந்த அறிவுடையவராக இருந்தார். அவர் போர்வீரர். அரசனுக்காக வாள்ப்படைக்குத் தலைமை தாங்கிப் பல போர் முனைகளைக் கண்டவர். வெற்றி கொண்டவர். இவர் கருங்கை ஒன்வாள் பெரும் பெயர் வழுதியுடன் தனித்தும் பல தடவைகளில் பகைவர்களுடனும் போரிட்டு வெற்றி பெற்றவர். அதனால் மாநன் எறிந்த வாளால் நெடுமாறன் ''வள்ளுவனார்'' என்ற நாமத்தைப் பெற்றவர். அதனால் தான் அவர் அரசனின் சகல குணங்களையும் மக்களின் தன்மையையும் அரசியலில் எழுதினார். திருமந்திரம் வள்ளுவருக்கு முந்தியது அதனால் வள்ளுவர் திருமந்திரத்தில் இருந்து பல பகுதிகளை எடுத்தாண்டுள்ளார்.

திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்கள் உள்ளன. அதில் முதல் நான்கு தந்திரங்களும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் கூறுகின்றன. அதனால் அவை வேதமாகும். அதில் அதிகார வைப்பு முறை திருமந்திரத்தில் உள்ளது போல இருக்கின்றது. உதாரணமாக நிலையாமை, கொல்லாமை, புல்லால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, மகளிர் இழிவு, நல்குரவு, அன்புடைமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

திருமந்திரத்தில் வள்ளுவர் எடுத்தாண்ட சில பகுதிகள் பின்வருமாறு.

1. அகரமுதல எழுத்தெல்லாம்

ஆரும் அறியார் ஆகாரம் அவனென்று

2. ஆதிபகவன் முதற்றேயுலகு
அறிவுடையார் நெஞ்சோடு ஆதிபகவனும்

3. மலர்மிசை ஏகினான்
போது கந்தேறும் பூரி சடையானடி

4. இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார்
பொருளதுவாய் நின்ற புண்ணியன்

5. எண்குணத்தான்
எண்சாதி தூய்மையும்

6. தனக்குவமையில்லாதான்
தன்னையொப்பார் ஒன்று மில்லாத் தலைவன்

7. அறவாழி அந்தணன்
அறவாழி அந்தணன் ஆதி பராபரன்

8. தானம் தவம் இரண்டும் விளைக்கும் தவம்
அறம் போல் துணையாமே

9. உரன் என்றும் தோட்டியான்
அடக்க அறிவெனும் தோட்டியை

10. சுவை ஒளியூறோசை
ஆமே சுவை ஒளி யூறோசை நாற்றம்

இவற்றை விடப் பல திருமந்திரப் பாடல்களில் கருத்தை அப்படியே எடுத்து வள்ளுவர் பாடியுள்ளார். ஒழுக்கக் கருத்தானாலும் சரிவேறெந்தக் கருத்தானாலும் சரி அவை மாறுபடாதவை. அதனால் பண்டைய புலவர்கள் அவற்றைப் பாடிய போதும் அவை கருத்தாகவே கருதப்பட்டன. ஆனால் வள்ளுவர் அதன் அடிகளைச் சிறிது மாற்றிக் கூறியுள்ளார்.

பொதுவாக அந்நாளில் மொழிபெயர்ப்பு நூல்கள் அதிகமாக வெளி வந்தன. இராமாயாணம், பாரதம் என்பவற்றைச் சொல்லலாம். ஆனால் திருமந்திரம் மொழிபெயர்ப்பு நூல் அல்ல. தனித் தமிழ் நூல். பொதுவாக ஆரியருக்கு விலை போனவர்கள் தமிழை மதிப்பதில்லை. தமிழில் நல்ல நூல்கள் வந்தாலும் அதை வடமொழியின் மொழிபெயர்பென்றே கூறுவர். இதற்காக ஓர் அறிஞர் கூட்டத்தை ஆரியர் பணம் கொடுத்து அமைத்து வைத்திருந்தனர். அத்துடன் நல்ல தமிழ் நூல்களையும் வேதங்களையும் உபநிடதங்களையும் தமிழில் இருந்ததைக் கண்ட ஆரியர் அவற்றை வடமொழியில் மொழிபெயர்த்து விட்டு தமிழ்ச் சுவடிகளை எரித்து விட்டதாக மறைமலையடிகள் கூறியுள்ளார். அதில் உண்மை இல்லாமல் இல்லை. தமிழர்கள் துணிந்து ஆரியருடன் போராடாது பயந்து இடம்பெயர்ந்து கொண்டிருந்ததால் தான் உலகத்தில் ஒரு தமிழ் அரசை அமைக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் ஆகமங்கள் ஒன்பது தான் இருந்தன. அவை சிவபெருமானால் ஆக்கப்பட்டவை. அவற்றை திருமூலர் திருமந்திரம் என்ற நூலாக ஆக்கியுள்ளார். ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களேயாகும். அதன் பின் ஆரியர் தமது பிழைப்புக்காகப் பல ஆகமங்களை எழுதினர். ஆகமங்கள் கட்டிடக் கலையையும், பூசை முறைகளையும், யாக குண்ட அமைப்புக்களையும் கூறுபவை. சைவ சமயம் இவற்றை ஏற்கவில்லை. ஆரியரான பிராமணர்கள் தமிழ் நாட்டுள்ப் புகுந்து தமது பிழைப்புக்காகப் பூசை முறைகளை உருவாக்கினர். இன்று ஆரியரின் கடவுளைப் பார்ப்பதற்குப் பல ஆயிரம் ரூபாக்களைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலை வேறு சமயங்களில் இல்லை. சைவசமயம் தனது ஈடேற்றத்திற்காகச் செய்யும் பூசைகளை அவரவரையே செய்யச் சொல்கிறது. சுத்தமான இடத்தில் மலர்ந்த பூக்களை வைத்துத் திருமுறைகளை ஓதும்படி கூறுவதோடு நமசிவய,

சிவயநம, சிவயசிவ, சிவசிவ என்ற தமிழ் மந்திரங்களை ஓதும் படி திருமந்திரம் கூறுகிறது. இந்த முறை பிராமணர்களால் பிழைப்புக்காக மாற்றப்பட்டது. சுயநலம் மிக்க தமிழர்கள் போரிடாது இடம்பெயர்ந்தது போலச் சுயநலத்திற்காகத் தமது சமய அனுட்டானங்களையும் விட்டு விட்டனர். இது கடந்த 6000 வருடங்களாக நடைபெற்று வருகிறது.

## பொதுப்பாயிரம்

இதில் கடவுள் வாழ்த்து ஐம்பது பாடல்களில் கூறப்பட்டுள்ளது. சிவனது பெருமைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அடுத்து மும்மூர்த்திகளின் முறைமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. சிவபெருமான் தான் முழு முதல்வன். அயன், அரியால் கூட சிவனின் பெருமையை அறிந்து கொள்ள முடியாது. அரன் அரியையும் ஏனைய தேவர்களையும் சகல உயிரினங்களையும் படைத்தவன் சிவன். அவனை விட மேலான தெய்வம் இல்லை என்று கூறப்படுகிறது. அடுத்து வேதத்தின் சிறப்புக்கள் பற்றிக் கூறுகிறது. அதன் பின் ஆகமத்தின் சிறப்புக்கள் கூறப்படுகின்றன.

அதன் பின் அந்தணர்கள் கைக் கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிகள் பற்றிக் கூறப்படுகிறது. அடுத்து ஆகுதி வேட்டல் பற்றிக் கூறப்படுகிறது.

அடுத்துத் திருக்குறளில் கூறப்பட்ட அரசாட்சி முறை, வானச் சிறப்பு, அறஞ்செய்வான் திறன், அறஞ்செய்யான் திறன் அவை அடக்கம் பற்றிக் கூறப்படுகிறது.

அதன் பின் தற்சிறப்புப் பாயிரத்தில் குரு பரம்பரை பற்றிக் கூறப்படுகிறது. அதற்கடுத்ததாகத் திருமூலர் தனது வரலாற்றைக் கூறுகிறார்.

## முதலாம் தந்திரம்

இது காரணாகமாகும். இதன் கண் முதலில் உபதேசம் கூறப்பட்டது. அதன் பின் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை, கொல்லாமை புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, மகளிர் இழிவு, நல்குரவு, அன்புடைமை அன்பு செய்வாரை அறிவான் சிவன் கல்வி கேள்வி கேட்டமைதல், கல்லாமை நடுவு நிலைமை,கள்ளுண்ணாமை பற்றிக் கூறுகிறது. இவற்றைப் படித்த வள்ளுவர் இரண்டு அடியில் மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் குறளாக்கியுள்ளார்.

## இரண்டாம் தந்திரம்

இரண்டாம் தந்திரம் அகத்தியத்தில் தொடங்கி மூவகைச் சீவ வர்க்கத்தில் முடிவடைகிறது. சிவனைப் பற்றியும், சிவனின் இடப்பாகத்தில் அமர்ந்த உமையைப் பற்றியும், அவர்களது பெருமைகளைப் பற்றியும் கூறிய திருமூலர் 436 ஆவது பாடலில் இருந்து 474 ஆவது பாடல் வரை அதாவது 39 பாடல்களில் கருவுற்பத்தி பற்றிக் கூறுகிறார். இறந்த ஓர் உயிர் வினைக்கேற்றவாறு பிறப்பெடுக்கிறது. அதனால் உடல் மாறுமே தவிர உயிர் மாறுவதில்லை. உயிரானது இரண்டு நிலைக்குட்படும். ஒன்று சிவனை அடைந்து சிவனுடனேயே கூடியிருக்கும் இன்பநிலை. அடுத்தது பாவங்களைச் செய்து வினையை அதிகரித்து அடுத்தடுத்துப் பிறவிகளை எடுத்துத் துன்பப்படும் நிலை. இவ்வாறு உயிர் இரு நிலைகளுக்குட்படும் காரணம் வினை என்ற செயலாகும். ஆணும் பெண்ணும் கூடி அனுபவிக்கும் இன்பத்தைப் போன்ற ஓர் இன்பம் வேறு எதிலும் இல்லை என்று கூறும் திருமூலர் இவ் இன்பத்தை உயிரின் முக்கியமானதொரு செயலாகக் கொள்கிறார். ஒருவனின் புண்ணிய பாவங்கள் அவனது பிள்ளைகள் மூலமே பிறர் அறிந்து கொள்கின்றனர். அதனால் திருமூலர் அவ்வுறவுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார். அதனால் அவர் மிக மிகச் சிறந்த பிள்ளைகளைப் பெறும் முறைகளையும் நோயான, குறைபாடான பிள்ளைகளைப் பெறும் முறைகளையும் கூறுகிறார். சிவனருள் இருந்தால் நல்ல பிள்ளைகளைப் பெறலாம். அப்படியாயின் சிவனருளைப் பெறுவது எப்படி என்று திருமூலர் விரிவாகக் கூறுகிறார். இவற்றை மிக விரிவாக எழுதியுள்ளேன். அவற்றைப் படிக்கவும். நாடு வளமுள்ளதாக இருக்க வேண்டுமானால் அறிவு மிக்க மக்கள் அங்கு வாழவேண்டும் என்றும் சொல்கிறார்.

## மூன்றாம் தந்திரம்

மூன்றாம் தந்திரம் வீராககமாகும். அது அட்டாங்க யோகத்தில் தொடங்கி வரசூலத்தில் முடிவடைகிறது. இன்பமென்பது இல்வாழ் தவநிலை என்றும் மணமக்கள் இருவரையும் சிவனும் சிவையுமாகக் கருதுவதே தமிழரது பண்பாகும். இல்வாழ்வர் சிவநினைவுடன் அறவழியில் இல்வாழ்வு வாழ்ந்து சிவனை அடைவதை நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கான வழிமுறைகள் இத் தந்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

## நான்காம் தந்திரம்

நான்காம் தந்திரம் சித்தாகமாகும். இது அசபையில் தொடங்கி யோகத்தில் முடிவடைகிறது. இது சிவபெருமானின் அடிமையாகுதல் பற்றியும், திருவைந்தெழுத்தின் பெருமைகள் பற்றியும் கூறுகிறது. அத்துடன் சக்கர வழிபாடு பற்றியும் அம்மையின் பெருமைகளையும் சக்கரங்களை அமைப்பது பற்றியும் விரிவாகக் கூறுகிறது.

## ஐந்தாம் தந்திரம்

ஐந்தாம் தந்திரம் வாதுள ஆகமாகும். இது சுத்த சைவத்தில் தொடங்கி உட்சமயங்கள் பற்றிச் சொல்லி முடிக்கிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் அறம் என்று சொல்லப்படும். அந்த அறத்தின் வாயிலாகப் பேறு உண்டாகும். பேறு என்பது சித்தாந்த சைவத்தை மேற்கொள்வதாகும். உலகில் உள்ள சமயங்களை நான்கு வகைப்படும். அவை முறையே சிவபெருமானின் உண்மையை உணராமை, சிவனின் முதன்மையை உணராமை, பேறுபெறும் நெறியை உணராமை பேற்றின் இயல்பை உணராமை என்பனவாகும். பேறு என்பது திருவடிக்கழைப்பு. இவ்வாறு ஐந்தாம் தந்திரம் கூறுகிறது.

## ஆறாம் தந்திரம்

ஆறாம் தந்திரம் வியாமளாகமம். இது சிவகுரு தரிசனத்தில் தொடங்கி பக்குவனில் முடிவடைகிறது. சிவநெறியில் வாழ்பவர்களுக்கு உறுதுணையாக இருந்து அருளும் சிவகுருவைப் பற்றிய விளக்கம் இத்தந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. சிவனே சிவகுருவாக வந்து தனது அடியவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து ஆட்கொள்ளும் முறைமை பற்றிக் கூறப்படுகிறது.

## ஏழாம் தந்திரம்

இது காலோத்தராகமமாகும். இது ஆறாதாரம் முதல் இதோபதேசம் வரை விரிவாகக் கூறுகிறது. இது பேற்று வழிபாடாகும். பேற்று வழிபாடு என்பது சிவலிங்க வழிபாடு என்பது சிவலிங்க வழிபாடாகும். அதற்கான வழிவகைகளைப் பற்றிக் கூறுகிறது. சிவபூசை, குருவின் பூசை சிவனடியார்களின் வழிபாடு, சிவனடியார்களின் நிலைகள் பற்றி விரிவாகக் கூறுகிறது. சிவயோகிகளை எவ்வாறு அடக்கம் செய்தல் வேண்டும், சிவயோகிகளின் பெருமை, அவர்களை வழிபடும் முறை பற்றியும் சிவலிங்க வழிபாட்டின் பயன்கள் பற்றியும் இத்தந்திரம் கூறுகிறது. அத்துடன் சிவனைத் தமிழில் ஆராதித்தல் வேண்டும் என்றும் கூறுகிறது. இதன் மூலம் ஐந்தெழுத்தின் மகிமையும் கூறப்படுகிறது.

## எட்டாம் தந்திரம்

எட்டாம் தந்திரம் சுப்பிரராகமமாகும். இது உடலில் பஞ்சபேதம் என்ற தலைப்பில் தொடங்கிச் சோதனையில் முடிவடைகிறது. இது உடலைப் பற்றியும் அதன் தன்மைகளைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்றும் கூறுகிறது. அத்துவாக்கள், கேவல சகல சுத்தநிலை பற்றியும் கூறுகிறது. உயிரைப் பற்றியிருக்கும் பசை மலமாகிய

ஆணவத்தை அகற்றும் முறை பற்றி விரிவாகக் கூறுகிறது. அத்துடன் முத்தியைப் பற்றியும் கூறுகிறது.

## ஒன்பதாம் தந்திரம்

ஒன்பதாம் தந்திரம் மகுடாகமமாகும். இது குருமட தரிசனம் முதல் சர்வ வியாபி வரை விபரமாகக் கூறுகிறது. முக்கியமாகச் சிவன் ஞானகுருவாக வந்து தரிசனம் கொடுப்பது பற்றிச் சிறப்பாகச் கூறுகிறது. பிரணவ சாமாதி பற்றிக் கூறும் போது ஓ மொழி தான் தூலப் பிரணவம் என்று சொல்கிறது. அத்துடன் உயிரின் இயல்பான நிலை, பரிய ஐந்தெழுத்தின் பெருமை, நுண்மை ஐந்தெழுத்து என்பன பற்றி மிகவம் விரிவாகக் கூறுகிறது.

திருமந்திரம் ஒன்பது ஆகமங்களைப் பற்றிக் கூறுகிறது. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தந்திரமாக அமைத்துக் கூறுகிறது. திருமூலரைச் சிவன் அழைத்து நீ பூவுலகிற்குச் சென்று சைவ சமய விதிகளையும் தத்துவங்களையும் உனது மாணவர்களுக்கு உணர்த்து. அத்துடன் அவற்றை நூலாக்கு. உனது மாணவர்கள் தமிழ் மூவாயிரம் என்ற மந்திரத்தை மக்களுக்கு உபதேசிப்பார்கள் என்று கூறியதால் தான் திருமூலர் பூமிக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அப்பொழுது ஒன்பது ஆகமங்களே தமிழில் இருந்தன. அவ்ஒன்பது ஆகமங்களைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. ஆரியர்கள் ஒன்பது ஆகமங்களையும் வடமொழியில் மொழி பெயர்த்து விட்டுத் தமிழ்ச் சுவடிகளை அழித்து விட்டனர் என்று மறைமலையடிகள் கூறுகிறார். அதில் உண்மை இல்லாமல் இல்லை.

அதன் பின் ஏனைய ஆகமங்கள் ஆரியரால் வடமொழியில் எழுதப்பட்டன. ஆரியர் பலம் மிக்க அரசர்களாக இருந்தமையால் அவர்கள் சொல்வதை யாரும் மறுக்கவில்லை. தமிழ் அறிஞர்கள் பணத்திற்காக ஆரியரோடு சேர்ந்து கொண்டனர். இதனால் அவர்கள் சொல்வதே தத்துவமாயிற்று. தமிழில் எழுந்த ஆகமங்கள் கட்டிடக்கலை பற்றிக் கூறவில்லை. கோவில்களைக் கட்ட வேண்டும் என்றும் கூறவில்லை. மரநிழலில் சிவலிங்கத்தை அமைத்துத் தமிழால் பூசை செய்யும் படியே திருமந்திரம் கூறுகிறது. பின் எழுதப்பட்ட ஆகமங்கள் தான் கட்டிடக் கலை ஓம குண்ட அமைப்புக்கள் பற்றிக் கூறுகிறது. திருமந்திரம் கிரியைகள், யாகங்கள் முதலியன செய்யக் கூடாதென்று கூறுகிறது. சுத்தமான பூமியில் பூத்த மலர்களை வைத்து திருவைந்தெழுத்தையும் திருமுறைகளையும் ஓதினால் போதும். அது தான் சிவனுக்கு விருப்பமானது என்று திருமூலர் கூறுகிறார். இவற்றை விரிவாகக் கதைகளில் கூறியுள்ளேன்.

திருமூலர் ஆரியப் பிராமணரையும் அவர்களது பூசை முறைகளையும் ஏற்கவில்லை. சிவன் தமிழன் என்றும் ஐந்தெழுத்தையும் திருமுறைகளையும் ஓதிப் பிரார்த்தனை செய்யுமாறும் கூறுகிறார். அத்துடன் கிரியைகள், யாகங்கள், வேள்விகள் எதையும் செய்யக் கூடாது என்று கண்டிப்புடன் கூறுகிறார். ஒரு தீய செயலைச் செய்தால் அதற்கான தண்டனை உண்டென்றும் அதைப் பரிகாரங்கள் செய்து அகற்ற முடியாதென்றும் கூறுகிறார். ஒரு தீயவன் ஒரு பசு மாட்டைக் களவாகப் பிடித்துச் சென்று அதை வெட்டிப் பலருக்கும் அதன் மாமிசத்தைக் கொடுக்க நினைத்தான். அதை வெட்டிய போது அதன் வயிற்றுக்குள்க் கன்று இருந்தது. அதனால் பயந்த அவன் ஒரு சுவாமியாரிடம் சென்று அதற்குப் பரிகாரம் செய்யும் படியும், அதற்காகப் பணத்தைத் தருவதாகவும் கூறினான். அதற்கு அந்தச் சுவாமியார்,''நீ எனக்குப் பணம் தரத்தேவையில்லை. இறந்த அந்தப் பசுவுக்கும் கன்றிற்கும் உயிரைக் கொடுத்து எழுப்பி விடு. நீ செய்த பாவம் நீங்கி விடும்'' என்றார்.

ஒரு செயலுக்குப் பரிகாரம் செய்ய முடியாது. நாம் செய்த வினைப்படியே வாழ்வு அமைகிறது. அதனால் இன்பமும் துன்பமும் வருகின்றன. அதை நீக்கக் கடவுளைத் தொழ வேண்டும். அதைக் கடவுள் நீக்கினால் தான் நன்மை உண்டாகும்.

ஒரு பெண்ணிற்குத் திருமணம் நடைபெறாவிட்டால் சிவனை முழு மனதுடன் தொழுது ஐந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். சிவனின் அருளால் பாவங்கள் நீங்குமே தவிரப் பரிகாரங்களால் நீங்காது.

சோதிடம் பிழைப்புக்காக ஆரியரால் அறிமுகப்படுத்தப்பட்டது. சிவனின் ஆணைப்படி தான் உலகம் இயங்குகிறது. கோள்களால் எதுவும் செய்ய முடியாது. கோள்களுக்குச் சக்தி

இல்லை. சிவன் எதைச் சொல்கிறாரோ அதைச் செய்யும் பணியாளர்கள் தான் அவர்கள். பணியாளர்களைத் திருப்திப்படுத்துவதை விடுத்துச் சிவனைத் தொழுங்கள் யாவும் நன்றாக நடைபெறும்.

எமது அயலில் உள்ள போலிச் சாமியார் ஒருவர் தேசிக்காயை வெட்டிப் பலன் சொல்வார். எதுவும் நடைபெற்றதில்லை இருந்தும் மூடர்கள் சென்று அவர் சொற்படி நடக்கிறார்கள். இதுவரை அவர் சொன்னது எதுவும் நடைபெறவில்லை.

காலையில் தொலைக்காட்சிகள் பலவும் சோதிடத்தைச் சொல்கின்றன. இரு பஞ்சாங்கங்கள் உண்டு. ஒன்றில் சுபநேரம் மற்றதில் மரணயோகம். அதைவிட பத்துக்கு மேற்பட்ட தொலைக்காட்சிகளில் இன்றைய பலன் கூறப்படுகிறது. பத்தும் பத்து விதமாகச் சொல்கிறது. வாக்கிய பஞ்சாங்கத்தில் சுக்கிரன் எட்டில் இருந்தால் கணித பஞ்சாங்கத்தில் சுக்கிரன் ஏழில் இருப்பார். ஒரு பஞ்சாங்கம் சுபநேரம் என்று சொல்ல மறுபஞ்சாங்கம் அது சுபவேளை அல்ல என்று கூறுகிறது.

திருமூலர் சோதிடத்தை ஏற்கவில்லை. சிவனை வணங்குவோர்க்குத் துன்பமில்லை என்கிறார்.

‘‘சைவர்கள் சிவனை வணங்குபவர்கள். அவர்கள் சிவனை வணங்கி விட்டு எதையும் செய்யலாம். சுபவேளை பார்க்க வேண்டியதில்லை. யாவும் வினைப்படி நடைபெறுவதால் சிவனிடம் யாவற்றையும் ஒப்படைத்து விட்டு எதையும் செய்யுங்கள்’’ என்கிறார் திருமூலர்.

நல்ல நாள் பார்த்து சுபவேளையில் செய்த திருணங்கள் நூறு வீதமும் பிரச்சினைப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சுபவேளையில் செய்த பல வியாபார நிலையங்களில் விற்பனை நடைபெறவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது. சுபவேளை, ஆராதனை யாவும் போலியானவை. கடவுளிடம் ஒப்படைத்து விட்டுக் காரியமாறனுப்புங்கள் அவை வெற்றி பெறும்.

புத்தர் சைவ சமயத்தவர். அவர் கிரியைகள், யாகங்கள், பூசைகளை ஏற்கவில்லை. தியானத்தை மட்டும் ஏற்றார். பற்றற்றமனதுடன் செய்யப்படும் ஆராதனையையே அவர் வலியுறுத்தினார். அதையே திருமூலரும் சொல்கிறார். சைவ சமயத்தவரான புத்தர் மனஒடுக்கத்தை வலியுறுத்தினார். அதையே திருமூலரும் சொல்கிறார்.

வினைப்படி அமைவது வாழ்க்கை. அதை மாற்ற முடியாது மாற்ற வேண்டுமானால் கடவுளைத் தொழ வேண்டும். கடவுள் தான் எதையும் மாற்றுவார். யமன் மார்க்கண்டேயரைக் கவர வந்த போது சிவபெருமான் காலால் உதைத்து மார்க்கண்டேயரைக் காப்பாற்றியவர். அதனால் கடவுளை வணங்குங்கள். அவரால் தான் உங்களுக்கு நன்மை செய்ய முடியும். வேறு எவராலும் உங்களைக் காப்பாற்ற முடியாது. இது தான் உண்மை. அதனால் சிவனை ஐந்தெழுத்தாலும் திருமுறைகளாலும் வணங்குங்கள். வேறு எதையும் செய்யாதீர்கள்.

திருமூலர் சோதிடத்தை முழுமையாக நிராகரிக்கின்றார். சிவன், சூரியனாகவும், சந்திரனாகவும், அக்கினியாகவும் இருப்பவன். அவை தான் அவனது முக்கண்கள். முக்கண்களால் அவன் உலகை அளப்பவன். உலகில் உள்ள யாவும் சிவனின் ஆணைப்படியே இயங்குகின்றன. கோள்கள் உட்படக் கடவுள்கள் அனைவரும் சிவனின் ஆணைப்படி தான் நடக்க வேண்டும். அப்படி நடக்காதவர்கள் தண்டிக்கப்பட்ட வரலாறு புராணங்களில் உண்டு. உதாரணமாகப் பிரமாவும் விட்டுணுவும் அடி முடி தேடிய வரலாறு அனைவருக்கும் தெரியும். ஆரியப் பிராமணர்கள் தான் கிரியை முறைகளையும், சோதிடத்தையும் தமது பிழைப்புக்காக ஏற்படுத்தினர். இன்னென்ன கிரியை செய்தால் இன்னென்ன பயன் கிடைக்கும் என்று பிராமணர் கூறியதும் ஆசை மிகுந்த மனிதர் அக்கிரியைகளை விருப்போடு செய்தனர். அவற்றைச் செய்தும் எவையும் நடக்கவில்லை. எனக்குத் தெரிந்த ஒருவரின் பெண்ணுக்குப் பேசி வந்த மாப்பிளைகளைத் தொழில், சாதி, சமயம், தகுதி முதலியவற்றைப் பார்த்து விலக்கினார். அவரது நம்பிக்கைக்குரிய சோதிடர் உங்கள் பெண்ணுக்குப் பெரும் உத்தியோகத்தில் உள்ளவனே கணவனாக வருவான் என்று சொல்லிப் பல்வேறு விதமான பரிகாரங்களைச் செய்தார். அப்பெண்ணும் சோதிடத்தை நம்பினாள். இப்போ அறுபது வயது. திருமணமாகவில்லை. இப்போதும் பரிகாரங்கள் செய்கிறார்கள்.

சோதிடம் உண்மை அல்ல. இரண்டு பஞ்சாங்கங்கள் உண்டு. ஒன்றில் சுபநேரம் அடுத்ததில் மரணயோகம். ஒரு பஞ்சாங்கத்தில் சுக்கிரன் எட்டில் இருப்பார். மறு

பஞ்சாங்கத்தில் அதே சுக்கிரன் ஒன்பதில் இருப்பார். ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பே பூமி தன்னைத் தான் சுற்ற ஒரு நாளாகுமென்றும், பூமி சூரியனைச் சுற்ற 365 ¼ நாளாகும் என்றும், கோள்கள் எவ்வாறு இயங்குகின்றன என்றும் திருமூலர் கூறிவிட்டார். அதில் பல சர்ச்சைகள் இருந்து தற்போது தான் அது ஏற்கப்பட்டது. கோள்கள் சக்தியில்லாதவை. அவை சிவனின் ஆணையின்றி இயங்க முடியாதவை. அதனால் சிவனை வணங்குங்கள் என்கிறார் திருமூலர். பரிகாரங்கள் எவையும் பயனளிக்காது. எதற்கும் பரிகாரம் சிவனை வணங்குவதேயாகும்.

மரணத்தைப் பற்றி விரிவாகத் திருமூலர் கூறுகிறார். மரணமடைந்ததும் உடலைப் பாடையில் வைத்துத் தூக்கிச் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்போது பறைமேளம் அடித்தல் வேண்டும். தகனம் செய்த பின் அஸ்தியை அள்ளிச் சென்று புனித நீரில் கொட்டுதல் வேண்டும். பின் அந்நீரில் நீராடி விட்டு அந்நீரை எடுத்து வந்து வீட்டைக் கழுவுதல் வேண்டும். இதற்கு மேல் எதுவும் சொல்லப்படவில்லை. உயிரானது இறந்தவுடன் வினைப்படி சிவனின் ஆணைப்படி ஒரு கர்ப்பப்பைக்குள்ச் சென்று விடுகிறது. ஆன்மா அலையும் என்பது உண்மைக்கு மாறானது. அதனால் இறப்பின் பின் எந்தக் கிரியைகளும் செய்ய வேண்டியதில்லை என்றும் திருமூலர் கூறுகிறார்.

திருமணம் என்பது சிவனால் நிட்சயிக்கப்பட்டது. திருமணத்தின் போது உற்றார் உறவினர்கள் பெரியவர்கள் ஆசிரியர் முதலியோர் கூடி நிற்பர். ஊர்ப் பெரியவர் ஒருவர் தாலியை எடுத்து மணமகனிடம் கொடுப்பார். மங்கல இசை இசைக்கப்படும். பெரியவர்கள் பூக்களாலும், அரிசியாலும் வாழ்த்துவர். அதன் பின் சுபவேளையில் மணமக்கள் ஒன்று சேர்வன. அன்று திருமணம் ஒரு விழாவாகக் கொண்டாடப்படும். இதில் பிராணமர்கள் கலந்து கொள்வதில்லை. 1960 – 1970 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு தான் கிராமங்களில் திருமணம் நடைபெற்றது.

திருமந்திரம் உலக நிகழ்வுகள் எல்லாவற்றையும் கூறுகிறது. பொய், பொறாமை, வஞ்சகம், சூது, நன்மை, தீமை, நிகழ்வுகள், கல்வி, கல்லாமை, விபச்சாரம் என்று அது கூறாத விடயங்கள் எதுவும் இல்லை. நான் எனது வாழ்வோடு திருமந்திரத்தை ஒத்துப் பார்த்தேன். அவை யாவும் சரியாக இருந்தன. நண்பர்கள் அயலவர்களின் வாழ்வோடும் ஒத்துப் பார்த்தேன். அவையும் சரியாகவே இருந்தன.

எது நடக்க வேண்டுமோ. அது தான் நடக்கும். அதை மாற்றச் சிவனால் தான் முடியும் என்பது திருமந்திர வாக்கு. அது உண்மை. நான் 1.9.1989 இல் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டேன். அப்போது எந்த வசதிகளும் இல்லாத ஒரு மிகச் சிறிய பாடசாலையாக அது இருந்தது. சுமார் 130 வருடங்களாக குடிநீரை மாணவர்கள் வீட்டில் இருந்தே கொண்டு வந்தனர். அதனால் ஒரு நீர்த்தாங்கி அமைக்க விரும்பி அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டேன். அதற்கான அத்திபாரமிட்டேன். 1.2.1990 இல் நான் உதவி ஆசிரியராகக் கோப்பாய் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டேன். அப்போது செல்வி. திலகவதி பெரியதம்பி கல்விப் பணிப்பாளராக இருந்தார். நான் ஏன் இடமாற்றப்பட்டேன் என்பது எனக்குத் தெரியாது. கல்விப் பணிப்பாளரைச் சந்திக்க முயற்சித்தேன். முடியவில்லை. அதனால் ஒரு கடிதத்தை எழுதிப் பதிவுத் தாளில் அனுப்பினேன். என்னை இடமாற்றம் செய்த காரணம் என்ன? எதற்காகச் செய்தீர்கள். அது நியாயமானதல்ல. இதற்கான தண்டனை உங்களுக்குக் கிடைக்கும் என்று எழுதினேன்.

ஒரு மாதம் கழிய ஐந்தாம் ஆண்டு கற்ற பிரபாகரன் என்ற மாணவன். வயலில் உள்ள கிணற்றில் நீர் குடிக்கச் சென்று தவறி விழுந்து மரணமானவன். அடுத்த சில மாதங்களில் கல்விப் பணிப்பாளர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார். சிவன் தவறானவற்றைச் செய்தால் தண்டிக்கப்படுவர் என்பதை உணர்த்தினான்.

நாவலர் வித்தியாலயத்தில் ஒரு முக்கியமான பிரச்சினை இருந்தது. அது புலிகளுடன் சம்பந்தப்பட்டது. அதனால் யாரும் அதிபர் பதவியேர்க்கப் பயப்பட்டனர். அதனால் தான் நான், எனக்குத் தெரியாமலே நியமிக்கப்பட்டேன். புங்குடு தீவில் இருந்து வந்த அதிபர் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது இடமாற்றம் பெற்றுச் சென்றதால் மீண்டும் 1.2.1991 இல் நான் அதிபராக நியமனம் பெற்றேன்.

பாடசாலை அசுரவேகத்தில் வளர்ந்தது. மக்கள் என்னோடு இணைந்து செயலாற்றினர். அதனால் பருத்தித்துறை வீதியில் சுற்று மதில் கட்டினேன். மாணவர்கள் ஒவ்வொரு வரையும் சீமேந்துக் கற்கள் கொண்டு வரும்படி சொன்னேன். தேவையான கற்கள் சேர்ந்தன. இருபத்தைந்திற்கு மேற்பட்ட மேசன்மார்கள் பெற்றாராக இருந்தனர். மிகுதிப் பெற்றார்

கூலிகளாக ஒவ்வொரு நாள் வேலை செய்தனர். இரண்டு பக்க மதில் சுவர் இரண்டு வாரத்தில் கட்டப்பட்டது. அதனால் பாடசாலை மூடிய பின்பு பாடசாலை வளவில் சென்ற பாதை மூடப்பட்டது.

அதன் பின் நீர்த் தாங்கி அமைத்து எல்லா வகுப்பறைக்கும் நீர் வழங்கினேன். இது சிரமதான முறையில் செய்யப்பட்டது.

நாவலர் சிலையை அமைத்தேன். கணனி வசதியைச் செய்தேன். கோவில் கட்டினேன். வெளிநாட்டில் இருந்து வந்த பழைய மாணவர் ஒருவர் பாடசாலைக்கு அருகில் விற்பனைக்காக இருந்த நிலத்தைத் தான் வாங்கித் தருவதாகக் கூறினான். அவனை நம்பி அச்சவாரம் கொடுத்தேன். அவன் பணம் அனுப்பவில்லை. அதைச் சிவனிடம் ஒப்படைத்தேன். சிவனருளால் பணம் வந்தது. அக்காணியை நான் வாங்கியதைப் பற்றிய தகவல்கள் எதுவும் பாடசாலையில் இல்லை. போர் நடந்த வேளையில் ஒரு ரூபா வாங்குவதே இயலாத காரியம். இலட்சக்கணக்கான ரூபாவை சிவன் தந்தான். கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக பணிபுரிந்த கடவுள் சுப்பிரமணியத்தின் மகன் கந்ததேவா வீதியில் நின்ற என்னை மறித்து ஒரு பெருந்தொகைப் பணத்தைத் தந்தார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. அவர் எமது பாடசாலையில் கற்கவும் இல்லை. அவரை நான் பணம் கேட்கவும் இல்லை. சிவன் எனது நிலையை உணர்ந்து அவரை அனுப்பினார். அவர் ஏன் தந்தார், எதற்குத் தந்தார் என்றும் எனக்குத் தெரியாது. நம்பியவர்கள் திட்டமிட்டு ஏமாற்றிய போதும் சிவன் எனது நிலையை அறிந்து உதவியதை என்னால் மறக்க முடியவில்லை. தமது தேவைக்காக சேருபவர்கள் தமது தேவை முடிந்ததும் விலகி விடுவார்கள். இது பல விடயங்களில் எனக்கு நடந்தது. எனினும் சிவனின் உதவி இருந்ததால் எவராலும் என்னைத் துன்பப்படுத்த முடியவில்லை. அவர்களே துன்பப்பட்டனர். அதற்கு முன் காணியைத் தந்த நாவலர் வித்தியாலயத்தின் அதிபர் ஒருவர் பணம் கொடுக்கும் தவணை தப்பியதால் நான் சொல்வவதைக் கேளாது நீதிமன்றம் சென்றார். அதனால் நீதிமன்றச் செலவுக் காசையும் கட்டினேன். பத்துப் பதினைந்து வருடங்கள் அதிபராக இருந்த அந்தப் பெரும் மனிதன் செலவுக் காசைப் பெற்றது எனக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்தது. 125 வருடகாலமாக மழை காலத்தில் தேங்கி நின்ற வெள்ளத்தை 500 ரைக்கர் லோட் மண் பறித்து நிரப்பினேன். இதனால் 125 வருடங்களாக வெள்ளத்தில் நீந்திய மாணவர்களுக்கு அதிலிருந்து விடிவு கிடைத்தது. அதை எனது மாணவி ஒருத்தி உதவி செய்யும் நிறுவனமொன்றில் பொறுப்பாளராக இருந்த போது செய்து தந்தவர். செய்து தந்த ஞானசேகரம் ஞானரூபிக்கு நன்றி மட்டும் சொன்னால் போதாது. இவ்வளவு செய்தும் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை. தமது கையாட்கள் ஏதாவது அற்பமாகச் செய்தால் கூடக் கூட்டங்களில் பாராட்டுவார்கள். இது இப்போதும் நடைமுறையில் உள்ளது.அதன் பின் நான் நல்லூர்க் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றேன். இது எனக்குக் கடவுள் தந்த பரிசு. இலங்கையிலேயே மிகச் சிறந்த கல்விக் கோட்டம் நல்லூர். ஆறுமுக நாவலர் பிறந்த ஊர். நான் சென்ற பின்பு தான் வழக்கு நடைபெற்றது. அதன் பின் வந்த அதிபர் அதைப் பற்றி எதிலும் குறிப்பிடவில்லை. இது பற்றி நான் எழுதும் நூல்களில் எல்லாம் எழுதியுள்ளேன். கல்வி வரலாறு முழுவதும் எழுதியுள்ளேன். 1990 ஆம் ஆண்டுக்குப் பின் யாழ்ப்பாணக் கல்வி படிப்படியாக வீழ்ச்சியடைந்து கடைசி நிலைக்கு வந்து விட்டது. அதற்குக் காரணம் போர் அல்ல. கல்வி அதிகாரிகள். தரமுள்ள அதிபர்கள் நூற்றுக்கு மேல் இருந்தும் தரமில்லாத அதிபர்களே உயர்தரப் பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பான்மையானோர் அதிகாரிகளின் உறவினர்கள், நண்பர்கள். நான் தரம் ஒன்று அதிபராக பதினைந்து ஆண்டுகள் ஓர் ஆரம்பப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினேன். நான் உயர் கல்வி கற்ற பாடசாலை அருகில் இருந்தது. 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது கல்விக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் கல்விப் பணிப்பாளரை அழைத்து கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அதிபராக என்னை நியமிக்கும்படி கூறிச் சென்றனர். எனக்கு முன்னால் சொல்லப்பட்டது. அப்போது சம்பதித்த கல்விப் பணிப்பாளர் அவர்கள் வன்னிக்குச் சென்றதும் தனக்கும் தனது மனைவிக்கும் வேண்டிய வரை அதிபராக நியமித்தார். அன்று தொட்டது சனியன். 2000 மாணவர்கள் கற்ற தலைசிறந்த அப்பாடசாலை இன்று பெரும் பரிதாபத்திற்குரியதாக விளங்குகிறது.

பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் இருந்த பிள்ளையாருக்குக் கோவில் கட்டி அதில் பிரதிட்டை செய்தேன். பாடசாலை இலங்கையில் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக அப்போது திகழ்ந்தது. செய்ய முடியாத பல செயல்களைச் செய்ய வைத்தது எனது முயற்சியும் நேர்மையான நடத்தையும் தான். ஒழுக்கமுள்ளவனின் கோரிக்கைகளைச் சிவன் உடனேயே ஏற்றுத் தகுந்த நடவடிக்கை எடுப்பார் என்று திருமூலர் கூறுகிறார். பல

சேவைகளைச் செய்த போதும் கல்விப் புலத்தில் உள்ள அதிகாரிகள் என்னை வெறுத்தமைக்குக் காரணம் அதிகாரிகளின் மனைவிமார். இனத்தவர்கள் என்னோடு போட்டியிட்டு வெல்ல முடியாமையே. எப்பொழுதும் எவ்வேளையிலும் சிவன் என்னுடன் கூட இருந்தமையால் எனக்கு வெற்றிகளே வந்தமைந்தன.

2005 ஆம் ஆண்டு ஓர் ஆசிரியர் எனது செயல்கள் பற்றிக் கல்விப் பணிப்பாளருக்கு முறையிட்டார். எனது நண்பராக இருந்த அதிகாரிகள் இருவர் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினர். கல்விப் பணிப்பாளரின் தலைமையில் வந்த விசாரணைக் குழு பல்வேறு விடயங்களையும் ஆராய்ந்தது. பின் எனக்குப் பதவி உயர்வு கொடுக்குமாறு சிபாரிசு செய்தது. அதனால் தான் எனக்குக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவி கிடைத்தது.

திருமந்திரத்தில் சிவபக்தி பற்றியும் சிவனடியார்களின் செயல்கள் பற்றியும் கூறப்பட்டவை எனது வாழ்விலும் நடைபெற்றன.

1985 ஆம் ஆண்டும் 2006 ஆம் ஆண்டும் மிகமிக முக்கியமான காலம். இக்காலங்களில் பெரும் செல்வாக்கும் பெரும் நன்மைகளும் சிவனருளால் வந்து சேர்ந்தன. அத்துடன் சிவன் என்னைத் தீயசெயல்கள் செய்யாவண்ணம் தடுத்தாட் கொள்வான். இவை பற்றித் திருமந்திரக் கதைகளில் விபரமாக எழுதியுள்ளேன். திருமந்திரக் கதைகள் என்றதும் கடவுளைப் பற்றிய கதைகள் என்று எண்ண வேண்டாம். சமூகத்தில் நடைபெறும் நல்ல கெட்ட செயல்களைக் கதைகளாக எழுதியுள்ளேன். முன்பு நான் எழுதிய திருவருட்பயன் கதைகள் சமூகக்கதைகளே. அதைத் திருவாவடுதுறை ஆதீனம் சித்தநூலென ஏற்றுள்ளது.

என்னைப் பழிவாங்கப் பலர் முயன்றனர். முடியவில்லை. பணபலமும் அதிகார மிடுக்கும் உள்ளோர் பல சந்தர்ப்பங்களில் பல்லுடைபட்டனர். அதனால் பாடசாலை மாணவர்களின் சாதனைகளைக் கூட அவர்களால் ஏற்றுப் பாராட்ட முடியவில்லை. இதற்குக் காரண கர்த்தா சிவன். அவன் நல்லவர்களைத் தண்டிக்க விடமாட்டான்.

இலக்கியத் துறையிலும் எனது சாதனைகளை முறியடிக்க யாராலும் முடியாது. ஏறக்குறையப் பத்தாயிரம் கதைகளை எழுதியுள்ளேன். எனது மனமும் உடலும் சோரும் போது சிவன் என்னுள்ளே தோன்றி சோர்வை அகற்றித் திடத்தைக் கொடுப்பான். 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டுக் கல்வி வரலாற்றை எனது நூல்களினூடாகத் தான் எதிர்காலச் சமூகம் அறிந்து கொள்ள வேண்டும். இது சிவனது செயல். தேவையானவற்றைத் தேவையேற்படும் போது செயலாற்ற வைப்பவன் சிவன். அவன் அழிந்து கொண்டிருந்த தத்துவ நூல்களைச் சிறுவர்களும் புரிந்து கொள்ளும்படி என்னைக் கொண்டு கதைகளாக்கினவன். இது வரலாறு காணாத உண்மை.

என்னைப் பழி வாங்க நினைத்த சகலரும் பாதிக்கப்பட்டனர். நல்லவற்றைச் செய்பவனை தண்டிப்பவனும் தடுப்பவனும் கடவுளால் தண்டிக்கப்படுவர் என்பதற்கு எனது பாடசாலை வாழ்க்கை ஓர் உதாரணமாக அமைந்தது. அதிகாரிகள் பழிவாங்க நினைத்த போதெல்லாம் அவை நன்மையாகவே முடிந்தன. இதை நான் எழுதுவதற்குக் காரணம் இதை வாசிப்பவர்கள் உணர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகவே எதையும் மனிதனால் முடிவெடுக்க முடியாது. கடவுள் முடிவெடுப்பதை மனிதர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்க வேண்டும். இது விதியின் கட்டளை.

தீயவற்றை செய்யக் கூடாது. செய்தால் அத்தீய செயலில் ஏதாவது ஒரு நன்மை உண்டாகக் கூடியதாகச் செய்தல் வேண்டும்.

ஒரு நாள் சில பாடசாலை மாணவர்கள் வீதியால் சென்று கொண்டிருந்தனர். அப்போது பெரும் போர் நடைபெற்ற காலம். எமது பாடசாலைக்கு அருகில் உள்ள பாடசாலை மாணவர்கள் அவர்கள். வீதியால் மாணவர்கள் செல்வதைக் கண்ட கல்விப் பணிப்பாளர் அவர்களை அழைத்துக் கொண்டு எமது பாடசாலைக்கு வந்து என்னைப் பொறுப்பில்லாதவன் என்று ஏசினார். அவர்கள் எமது பாடசாலை மாணவர்கள் அல்ல என்று சொல்ல அவர் விடவில்லை. என் மீதிருந்த ஆத்திரம் தீர ஏசிவிட்டுச் சம்பவத்திரட்டுப் புத்தகத்தைக் கேட்டார். அப்போது நான் மாணவர்களைப் பார்த்து நீங்கள் எந்தப் பாடசாலையில் படிக்கிறீர்கள் என்று கேட்டேன். அவர்கள் தாம் படிக்கும் பாடசாலையின் பெயரைச் சொன்னார்கள். அதிகாரி ஆச்சரியப்படவில்லை. சாதாரணமாக போர்க் காலத்தில் பிற பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களையும் சேர்த்துக் கற்பியுங்கள். போக்குவரத்துச் சிரமம்'' என்றார்.

தூரப் பாடசாலை மாணவர்கள் பலர் எமது பாடசாலையில் கற்கின்றனர். அவர்களால் பயணம் செய்ய முடியாத நிலை. அவர்களைப் பற்றி நான் கூறவில்லை. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டும் என்பார்கள். அதைச் சொன்னால் அவர் அதற்கும் கண்டனம் தெரிவிப்பார். எனக்குள்ள அதிகாரத்தை இழக்க நான் விரும்பவில்லை.

இன்னொரு முறை எனது பாடசாலைக்கு வந்த அவர் எமது பாடசாலையில் தரம் ஒன்று வகுப்பு மூன்று பிரிவுகளை உடையது. அதை இரண்டாகக் குறைக்கும்படி கூறினார். பாடசாலை மிகவும் தரமாக நடைபெறுவதால் அயலில் உள்ள இருபது பாடசாலைகளில் தரம் ஒன்றில் 5 – 10 மாணவர்களே கற்றனர். அப்பாடசாலைகளுக்கு அருகிலுள்ள மாணவர்கள் எனது பாடசாலைக்கு வந்து விடுவர்.

பெற்றோர்கள் பலர் எனக்கு வேண்டியவர்களை அழைத்துக் கொண்டு வருவார்கள். அதனால் தரம் ஒன்று அனுமதி பெரும் சிரமமாக இருக்கும். அதனால் வகுப்பைக் குறைக்கும் படி கடிதம் தருமாறு கேட்டேன். அவரால் தரமுடியாது என்று எனக்குத் தெரியும். சில நாட்களுக்குப் பின்பு கல்விப் பணிப்பாளரது நண்பர் தனது பேரப் பிள்ளைக்கு அனுமதி கோரி வந்தார். நான் அவரிடம் ஒரு கடிதம் வாங்கி வருமாறு கூறினேன். அவர் வரவில்லை. அதன் பின் அவர் தனது நட்பைத் துண்டித்து விட்டார். நான் நினைப்பதைத் தான் செய்வேன். நீதியற்ற செயல்களை நினைக்க மாட்டேன். அதனால் நான் வகுப்பைக் குறைக்கவில்லை. அதன் பின் அவர் வரவும் இல்லை. ஒழுக்கமானவன். நீதிமான் சிவனுக்கன்றி வேறு எவருக்கும் பணியமாட்டான். மதிக்கவும் மாட்டான். இது திருமந்திர வாக்கு.

அதிபருக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. அதைத் தெரிந்த மனத் துணிவில்லாத அதிபர்கள் அதிகாரிகளிடம் கேளாமல் எதையும் செய்ய மாட்டார்கள். நான் அனுமதி பெற வேண்டியவற்றிற்கு மட்டும் அனுமதி பெறுவேன். அதிகாரிக்கு உதவியாக ஓர் அதிகாரி இருப்பார். அவர் அதிகாரியாக நடந்து கொள்வதில்லை. இன்னொரு அதிகாரியின் கையாளரான அதிபர் தான் அதிகாரியாகச் செயற்படுவார். எல்லோரும் அந்த அதிபரை விழுந்து கும்பிடுவர். நான் அவரை மதிப்பதில்லை. மதித்தால் நான் நினைத்தவற்றைச் செய்ய முடியாது. அவர் சொல்வதைத் தான் செய்தல் வேண்டும். அதனால் பாடசாலை முன்னேற மாட்டாது. பாடசாலைக்குத் தொல்லைகள் கொடுத்த எவரும் நிம்மதியாக வாழவில்லை. இதிலிருந்து ஒழுக்கமாகக் கடமை செய்பவர்களை கெடுக்க யாராலும் முடியாது என்று உணர்ந்து கொண்டேன். ஒழுக்கமுள்ளவரைச் சிவன் தன்னடியவனாக ஏற்பார். இது உண்மை. திருமந்திரம் சொல்லும் மந்திரம்.

எனது சேவைக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பல்வேறு நூல்களில் எழுதியுள்ளேன். அவற்றில் தவறியவை திருமந்திரத்தில் கதைகளாக எழுதியுள்ளேன். இத்துடன் எனது எழுத்துப் பணியை நிறைவு செய்யத் தீர்மானித்துள்ளேன். இருப்பினும் ஒரு நிறுவனம் சில நூல்களை எழுதித் தருமாறு கேட்கிறது. எழுதலாம் ஆனால் நீண்ட தூரம் வாகனத்தில் சென்று கணனியில் பதிவு செய்ய முடியவில்லை. அவர்களே அப்பணியைச் செய்தால் எழுதிக் கொடுக்க முடியும்.

நான் அணிந்துரை வாங்குவதில்லை. எண்பது பக்கங்களைக் கொண்ட ஒரு நூலுக்கு அணிந்துரை பெறப் பல முறை செல்லுதல் வேண்டும். அதுவும் தமக்குள்ள பிரச்சினைகளைச் சொல்லிக் கடைசியில் நூலை வாசிக்காமலே அணிந்துரை தருவர். இதனால் தான் அணிந்துரையை நான் பெறுவதில்லை. வெளியீட்டு விழாவுக்கு பல ஆயிரங்கள் செலவு செய்தல் வேண்டும். 10 – 15 பேர் வருவார்கள். அவர்கள் பேச்சைக் கேட்கமாட்டார்கள் ஏனென்றால் பேசுபவர் நூலை வாசிக்கமாட்டார். சில பக்கங்களை வாசித்து விட்டு அதில் உள்ள தவறுகளை விமர்சிப்பார். அதனால் வெளியீடு செய்வது எனக்குப் பிடிப்பதில்லை. விழாவுக்கு வந்தவர்களும் பேச்சைக் கேட்பதில்லை. சமீபத்தில் ஒரு நூல் வெளியீட்டு விழாவுக்குச் சென்றேன். உறவினர் உட்பட 25 பேர் கூட வரவில்லை. நூலாசிரியருக்குச் செலவு அதிகம். அந்தச் செலவு ஒரு பத்திரிகையில் விளம்பரஞ் செய்யப்போதும். பத்திரிகையில் வந்தால் ஆயிரக்கணக்கான மக்கள் பார்ப்பார்கள்.

நான் மக்களுக்குத் தேவையானவற்றையே எழுதுவேன். அதனால் எனது ஆக்கங்களைப் பலரும் வாசிக்கின்றனர்.

இலங்கையில் கொடுக்கப்படும் விருதுகள், பட்டங்கள், பரிசுகள் பற்றிக் கூற வேண்டும். என்னைத் தவிர வேறு எவரும் இவற்றைப் பற்றி எழுத மாட்டார்கள். விருதுகளை விரும்புவோர் ஊழல்களைக் கண்டிக்க மாட்டார்கள். சிங்கள அரசைப் பொறுத்தமட்டில் தமிழர்களையே நூல்களைத் தெரிவு செய்யும் படி பணிக்கிறது. அவர்கள் தமக்கு

விரும்பியோருக்கு அவற்றைக் கொடுக்கின்றனர். 2017 ஆம் ஆண்டு முதலமைச்சர் விருதுக்காக என்னை அழைத்தனர். நான் எழுதியளவு நூல்களை யாரும் எழுதவில்லை. வாகனம் பிடித்து அவற்றை ஏற்றிச் சென்றேன். எனக்கு நூறு புள்ளிகள் போடுவதாக குழுவின் தலைவர் தெரிவித்தார். பின்பு என்னிலும் பார்க்கப் புள்ளிகள் கூடப்பெற்ற ஒருவருக்கு அவ்விருது வழங்கப்பட்டது. விருது பெற்றவர் ஒரு நூலைக் கூட எழுதியதாக நான் கேள்விப்படவில்லை. அதனால் இப்போ விருது தர அழைத்தாலும் செல்வதில்லை. அழைத்தாலும் தரமாட்டார்கள். விருது என்பது ஒரு குழுவால் பரிசீலிக்கப்படுவது எனது நூல்களை இணையத்தில் இலட்சக்கணக்கானோர் வாசிக்கினறனர். அது போதும். இதற்கு எதிர் காலம் பதில் கூறும். அதற்கான தகவல்களாகத் தான் நான் இவற்றை எழுதுகிறேன்.

இங்குள்ள யாரும் எனது நூல்களை விமர்சிப்பதில்லை. முகநூலில் எது நூல்களின் அட்டைப் படங்களைப் போட்டால் விரும்புவதில்லை. ஆனால் இரகசியமாக வாசிப்பார்கள். ஏனென்றால் யாரும் எழுதாதவற்றையே நான் எழுதுவதால் அதை அறிந்து கொள்ள விரும்புவார்கள்.